

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.2.2024) தூத்துக்குடி, சூசைபாண்டியபுரத்தில் நடைபெற்ற தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் பெரு வெள்ளம் மற்றும் அதி கனமழையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், மாற்றுத்திறனாளிகளுக்கு மூன்று சக்கர வாகனங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு, அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, திருமதி. பி.கீதாஜீவன், அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், த.மனோ தங்கராஜ், நாடாளு மன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி கருணாநிதி, சட்டமன்ற உறுப்பினர்கள் சி.சண்முகையா, ஜி.வி.மார்க்கண்டேயன், ஊர்வசி செ. அமிர்தராஜ், தூத்துக்குடி மாநகராட்சி மேயர் பெ. ஜெகன், தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் கோ. லட்சுமிபதி, திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.கா.ப. கார்த்திகேயன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



குறிஞ்சி இல்லத்தில் சவூதி அயலக தி.மு.க.வின் மூத்த அமைப்பாளர் சேலம் சிக்கந்தர் ஒருங்கிணைப்பாளர், ஜவகர் சவரி முத்து தயாரிப்பில், திரைப்பட இசையமைப்பாளர் தாஜ் நூர் இசையமைப்பில், கவிஞர் நாகூர் பாரியின் பாடல் வரிகளில், கலைமாமணி இறையன்பன் குத்தூஸ் பாடிய "வந்தாச்சு வந்தாச்சு மாசம் ஆயிரம் என்ற பாடலின் ஒலிப்பேழையை கழக இளைஞர் அணிச் செயலாளர் – விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெளியிட, நாகை மாவட்ட கழக செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகத் தலைவருமான என்.கௌதமன், அயலக அணி செயலாளர் எம்.எம். அப்துல்லா எம்.பி. ஆகியோர் பெற்றுக் கொண்டார்.

### மார்ச் 1 – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள்!

# சேப்பாக்கம் பகுதி முழுவதும் நல உதவிகள் - குழந்தைகளுக்கு மோதிரம் வழங்கல்!

## தயாநிதி மாறன், மு.க.தமிழரசு, நே.சிற்றரசு பங்கேற்பு! மதன்மோகன் அறிக்கை!

சென்னை, பிப்.26-

கழகத் தலைவர்-முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சேப்பாக்கம் பகுதி முழுவதும் மார்ச் மாதம் முழுவதும் நல உதவிகள் வழங்கி ரத்த தான முகாம், மருத்துவ முகாம் நடத்தப்படுகிறது. மார்ச் 1-ந் தேதி பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவிக்கப்படுகிறது என்று பகுதிச் செயலாளர்- 9வது மண்டலக் குழுத் தலைவர் எஸ். மதன்மோகன் அறிவித்தள்ளார். இது குறித்த அவரது அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர்-முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை ( மார்ச் 1 ) முன்னிட்டு ஒரு மாதம் முழுவதும் சேப்பாக்கம் பகுதியில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளது.

சேப்பாக்கம் பகுதி சார்பில் பிறந்தநாளன்று பகுதியில் உள்ள அனைத்து வட்டங்களில் பாகங்கள் தோறும் கழகக் கொடி ஏற்றி இனிப்பு வழங்குதல்.

கஸ்தூரிபா அரசு மகப்பேறு மருத்துவமனையில் மார்ச் 1 அன்று பிறக்கும் அனைத்து குழந்தை களுக்கும் தங்க மோதிரம் வழங்குதல்.

விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல், பொதுமக்களுக்கு நல திட்ட உதவிகள் வழங்குதல்.

பள்ளி, கல்லூரி மாணவ-மாணவியருக்கு கல்வி உபகரணங்கள் வழங்குதல்.

ரத்த தான முகாம் மற்றும் மருத்துவ முகாம் நடத்துதல்.

**முத்தமிழறிஞர் நினைவகம் திறப்பு!**

முத்தமிழ் அறிஞர் கலைஞர் நினைவக திறப்பு விழாவில் கழகத்தினர் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும்.

பாகவாரியாக திண்ணைப் பிரச்சார பரப்புரை மேற்கொள்ளுதல் போன்ற நிகழ்ச்சிகள் சேப்பாக்கம் பகுதியில் உள்ள அனைத்து வட்டங்களிலும் நடைபெற உள்ளது.

இவ்வாறு சேப்பாக்கம் பகுதிக்குட்பட்ட வட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.

மேற்கண்ட அனைத்து நிகழ்ச்சிகளிலும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், மு.க.தமிழரசு, சென்னை மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி. ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### ஆர்.டி.சேகர் – சரவணன் முன்னிலை

# பெரம்பூர் வடக்குப் பகுதி பாக முகவர்கள் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் அ.முருகன் அறிவிப்பு!

சென்னை, பிப்.26

பெரம்பூர் வடக்கு பகுதிக்குட்பட்ட பாகமுகவர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (26.02.2024 - திங்கள் கிழமை) பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி. சேகர் தலைமையில் பெரம்பூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் சரவணன் முன்னிலையில் முத்தமிழ் நகர் முத்துகுமாரசாமி கல்லூரி எதிரில் உள்ள ராமசாமி மகாலில் நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தல் ஆலோசனைக் கூட்டத்திற்கு பெரம்பூர் வடக்கு பகுதிக்குட்பட்ட செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நகர மன்ற உறுப்பினர்கள், வட்ட செயலாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள் அனைத்து அணிகளின் மாவட்ட பகுதி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், பாகமுகவர்கள் (BLA 2) அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன் என பகுதிச் செயலாளர் அ.முருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### நந்தனம், சி.எம்.ஆர்.எல். வளாகத்தில்

# சென்னை புத்தொழில் மைய அலுவலகம்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, பிப்.26-**

**இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் 24.02.2024 அன்று நந்தனம், சி.எம்.ஆர்.எல். வளாகத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்தின் சென்னை புத்தொழில் மைய அலுவலகத்தை திறந்து வைத்தார்.**

இந்நிகழ்விற்கு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் முன்னிலை வகித்தார்.

புத்தொழில் நிறுவனங்களுக்கு பயிற்சிகள் வழங்க பயிற்சி அரங்கம், கலந்துரையாடல் அரங்கங்கள், தொலைபேசி சேவை மையம், துணிகர முதலீட்டாளர்கள் புத்தொழில் நிறுவனங்களை சந்திக்க அறைகள் உள்ளிட்ட நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், வெளிமாவட்டத்தில் செயல்படும் ஸ்டார்ட்அப் நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள், சென்னைக்கு வரும்போது பணிபுரிய இடம் வழங்குவதற்கான வசதிகளும் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் தற்போது செயல்படும் ஸ்டார்ட்அப் நிறுவனங்களின் எண்ணிக்கை மூன்று மடங்கு அதிகரித்துள்ளது. 2021ஆம் ஆண்டு மார்ச் மாதம் தமிழ்நாட்டில் செயல்பட்ட ஸ்டார்ட் அப்நிறுவனங்களின் எண்ணிக்கை 2,300. தற்போது டிபிஐஐடியில் பதிவுபெற்ற ஸ்டார்ட்அப் நிறுவனங்களின் எண்ணிக்கை 7,950.

ஸ்டார்ட்அப் டிஎன் கொள்கைக்குறிப்பில் 2032 ஆம் ஆண்டுக்குள் 15,000 ஸ்டார்ட்அப்களை உருவாக்க வேண்டும் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அத்துடன் சர்வதேச அளவில் சிறந்த ஸ்டார்ட்அப் சூழமைவு கொண்ட 20 இடங்களில் தமிழ்நாட்டை நிலைநிறுத்த வேண்டும் என்ற இலக்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் திருமதி அர்ச்சனா பட்நாயக், தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்தின் இயக்க இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரி சிவராஜா ராமநாதன் ஆகியோரும் பங்கேற்றனர்.


